සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| தரம் 07 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 16 T |
|---|---|---|

சுட்டெண்/ பெயர் ..............................................

# இஸ்லாம்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. ரிஸாலத் என்பதன் தமிழ்ப்பதம்,
 1. ஏகத்துவம் 2. இணை வைத்தல் 3. தூதுத்துவம் 4. நிராகரித்தல்

02. ஈமானின் இரண்டாவது விடயம்,
 1. மலக்குகளை நம்புதல் 2. அல்லாஹ்வை நம்புதல்
 3. மறுமையை நம்புதல் 4. வேதங்களை நம்புதல்

03. மலகுல் மௌத் எனப்படுவது,
 1. ஜிப்ரில் (அலை) 2. மீகாயீல் (அலை) 3. இஸ்ராபீல் (அலை) 4. இஸ்ராயீல் (அலை)

04. தாய்ப்பாலை மாத்திரம் அருந்தும் 2 வயதிற்குட்பட்ட ஆண்குழந்தையின் சிறுநீர்,
 1. கடுமையான நஜீஸ் 2. இலகுவான நஜீஸ் 3. சாதாரண நஜீஸ் 4. நஜீஸ் இல்லை

05. மி∴ராஜ் நிகழ்வு நடைபெற்ற மாதம்
 1. ரஜப் 2. துல் ஹஜ் 3. ஸபர் 4. ஷவ்வால்

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (✗) எனவும் அடையாளமிடுக.**

6. "திக்ர் கல்பி" என்பது உள்ளத்தால் செய்யும் திக்ராகும். (.........)
7. "லைலதுல் கத்ர்" முஹர்ரம் மாதத்தில் வரும். (.........)
8. தொழுகை பற்றி மறுமையில் விசாரிக்கப்பட மாட்டாது. (.........)
9. பெருந்தொடக்கை நீக்க குளிக்க வேண்டும். (.........)
10. நாயின் தோலை பதனிட்டு பயன்படுத்தலாம். (.........)

- **பின்வருவனவற்றை பொருத்தமான சொற்களைக் கொண்டு இணைக்க**

| | |
|---|---|
| 11. ரிழ்வான் (அலை) | ஸவ்ம் |
| 12. மஆத் | பாவமீட்சி |
| 13. நோன்பு | வஹ்தானிய்யதுன் |
| 14. தவ்பா | மறுமை நம்பிக்கை |
| 15. அல்லாஹ் | சுவர்க்கத்தின் அதிபதி |

- **பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

16. நோன்பாளிகள் நுழையும் சுவன வாயில் .................................................. ஆகும்.

17. நாம் .................................................. மாத்திரமே கையேந்தி பிரார்த்திக்க வேண்டும்.

18. நாயின் இரத்தம் .................................................. நஜுஸ் ஆகும்.

19. லைலதுல் கத்ர் .................................................. மாதங்களை விட சிறப்பானதாகும்.

20. நாவினால் மொழியும் திக்ர் அரபியில் .................................................. எனப்படும்.



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.

1. ஈமானின் இரு வகைகளைத் தருக.
2. சுத்தம் பற்றிய ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடுக.
3. குளிப்பின் இரு வகைகளும் எவை?
4. நாம் நோற்கும் ஸுன்னத்தான நோன்புகள் இரண்டு தருக.
5. திக்ரின் இரு வகைகளை குறிப்பிடுக.
6. நோன்பு நோற்க விதிவிலக்கப்பட்ட இருவரை குறிப்பிடுக.
7. கப்றில் கேள்வி கணக்கு கேட்டும் மலக்குகள் யார்?
8. ஈமான் இக்தியாரி என்றால் என்ன?

(2x8=16 புள்ளிகள்)

02. 1. நோன்பின் பயன்கள் 3 தருக.
2. மலக்குகள் நால்வரையும் அவர்களின் பொறுப்புக்களையும் தருக.
3. கடுமையான நஜீஸை சுத்தம் செய்யும் முறை யாது?

(3+4+4=11 புள்ளிகள்)

03. 1. நஜீஸின் வகைகள் 3 ம் எவை?
2. தொகையின் மூலம் எமக்குக் கிடைக்கும் பயன்கள் 4 எழுதுக.
3. பிரார்த்தனையின் நிபந்தனைகள் 4 ஐக் குறிப்பிடுக.

(3+4+4=11 புள்ளிகள்)

04. 1. ஹதீஸ் கூறும் நோன்பாளியின் மகழ்ச்சிக்குரிய சந்தர்ப்பங்கள் எவை?
2. ஸுன்னத்தான குளிப்புகள் 4 தருக.
3. வீண் விரயம் பற்றிய அல்குர்ஆன் வசனமொன்று தருக.

(3+4+4=11 புள்ளிகள்)

05. 1. தயம்மத்தை முறிக்கும் காரியங்கள் 3 தருக.
2. வுழு பற்றிய அல்குர்ஆன் அல்லது ஹதீஸ் வசனமொன்று தருக.
3. ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களில் 4 ஐக் குறிப்பிடுக.

(3+4+4=11 புள்ளிகள்)

06. 1. ரிஸாத்தில் உள்ளடங்கும் 3 விடயங்கள் எவை?
2. நபிமார்கள் நால்வரையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களையும் குறிப்பிடுக.
3. "லா இலாக இல்லல்லாஹ் முகம்மதுன் ரஸுலுல்லாஹ்" என்பதன் தமிழ்ப்பதம் யாது?

(3+4+4=11 புள்ளிகள்)

07. 1. ஜாயிஸான பண்புகள் எனப்படுவது யாது?
2. தயம்மும் செய்வதற்கான காரணங்கள் 2 தருக.
3. கடமையான குளிப்பை நிறைவேற்றும் முறையை விளக்குக.

(3+4+4=11 புள்ளிகள்)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 07 - இஸ்லாம்**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

| வினா இல. | | விடை | வினா இல. | | விடை |
|---|---|---|---|---|---|
| 1. | | 3 | 11. | | சுவர்க்கத்தின் அதிபதி |
| 2. | | 1 | 12. | | மறுமை நம்பிக்கை |
| 3. | | 4 | 13. | | ஸவ்ம் |
| 4. | | 2 | 14. | | பாவமீட்சி |
| 5. | | 1 | 15. | | வஹ்தானிய்யதுன் |
| 6. | | சரி | 16. | | ரய்யான் |
| 7. | | பிழை | 17. | | அல்லாஹ்விடம் |
| 8. | | பிழை | 18. | | கடுமையான |
| 9. | | சரி | 19. | | ஆயிரம் |
| 10 | | பிழை | 20. | | திக்ர் லிஸானி |

**பகுதி II**

| வினா இல. | | | விடை |
|---|---|---|---|
| 01. | 1. | | ஈமான் முத்மல், ஈமான் முபஸ்ஸல் |
| | 2. | | சுத்தம் ஈமானின் பாதி |
| | 3. | | பர்ளான குளிப்பு, ஸுன்னத்தான குளிப்பு |
| | 4. | | திங்கள், வியாழன், ஆஷுரா, தாஸுஆ |
| | 5. | | திக்ர் கல்பி, திக்ர் லிஸானி |
| | 6. | | நோயாளிகள், பயணிகள், கர்ப்பிணிகள், சிறுவர்கள் |
| | 7. | | முன்கர் (அலை), நகீர் (அலை) |
| | 8. | | ஈமானின் அனைத்து அம்சங்களையும் விளங்கி, உணர்ந்து நம்புதல் ஈமான் இக்தியாரி எனப்படும். |
| 02. | 1. | | பொறுமை, மனக்கட்டுப்பாடு / பாவங்களிலிருந்து தூரமாதல் / நன்மைகள் செய்ய ஆர்வம் அதிகரித்தல் / ஏழைகளின் பசியுணர்ந்து செலவழித்தல். |
| | 2. | | பாடப்புத்தகம் - பக்கம் 19 |
| | 3. | | குறித்த நஜீஸை அவ்விடத்திலிருந்து நீக்குதல். ஏழு தடவை நீரூற்றி கழுவுதல், முதலில் அல்லது இடையில் மண்ணை சேர்த்தல். பரந்த நீர் நிலையில கழுவும் போது நீரை கலக்கி விட்டு கழுவி எடுத்தல். |
| 03. | 1. | | கடுமையான நஜீஸ் / சாதாரண நஜீஸ் / இலகுவான நஜீஸ் |
| | 2. | | தொழுவதால் நன்மை கிடைக்கும் / சுவனம் கிடைக்கும் / நேரத்திற்கு இயங்கும் பழக்கம் / தலைமைத்துவ கட்டுப்பாடு /ரிஸ்க் விருத்தி / அல்லாஹ்வின் திருப்தி / உடற்பயிற்சி. |
| | 3. | | அல்லாஹ்விடம் மாத்திரம் கேட்டல் / உறுதியுடன் கேட்டல் / உறவுகளை துண்டிக்காதிருத்தல் / பதிலுக்கு அவசரப்படாமலிருத்தல்/ ஹலால் பேணல். |
| 04. | 1. | | நோன்பு திறக்கும் நேரம்/ அல்லாஹ்வை சந்திக்கும் நேரம் |
| | 2. | | ஜும்ஆ குளிப்பு / பெருநாள் குளிப்பு/ இஹ்ராமுக்காக குளித்தல் / கிரகண தொழுகைக்கு குளித்தல். |
| | 3. | | நிச்சயமாக வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்கள் ஆவர். (அல்குர்ஆன்) |
| 05. | 1. | | வுழுவை முறிக்கும் அனைத்தும் (உதாரணம் : காற்று, சிறுநீர்) / தண்ணீரை கண்டால் / நோய் குணமாகி விட்டால் |
| | 2. | | பாடப்புத்தகம் - பக்கம் 25 |
| | 3. | | அல்லாஹ்/ மலக்குகள்/ வேதங்கள் / நபிமார்கள் / மறுமை / கழா கத்ர் |



kalvi.lk

| | | | |
|---|---|---|---|
| 06. | 1.<br>2.<br><br><br><br>3. | | நபிமார்கள்/ வேதங்கள் / ஸுஹுபுகள்/ மலக்குமார்<br>தாவூத் (அலை) தபூர்<br>மூஸா (அலை) தௌராத்<br>ஈஸா (அலை) இன்ஜுல்<br>முகம்மத் (அலை) புர்கான்/ குர்ஆன்<br>வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை<br>முகம்மத் (ஸல்) அவனது தூதராவார். |
| 07. | 1.<br><br><br>2.<br><br><br>3. | | அல்லாஹ்வுக்கு இருக்கவும் இல்லாதிருக்கவும் முடியுமான பண்புகள் அல்லது அல்லாஹ் விரும்பியதை விரும்பியவாறு செய்யும் பண்பு ஜாயிஸான பண்பு எனப்படும்.<br>நீரில்லாத போது,<br>குடிப்பதற்கு மட்டும் நீர் காணப்படும் போது,<br>நோயின் காரணமாக - தண்ணீரை தொட முடியாத நிலை<br>கடமையான குளிப்பை நிறைவேற்ற மிகப்பரிசுத்தமான நீரை பயன்படுத்த வேண்டும்.<br>குளிப்பவர் முதலில் சிறுநீர் கழிக்க வேண்டும்.<br>அவ்ரத்தை மறைத்து ஆடை அணிதல் வேண்டும்.<br>ஆடை அல்லது உடலில் அசுத்தம் பட்டிருந்தால் அதை நீக்குதல்.<br>வுழு செய்து கொள்ளல்.<br>உடல் முழுவதும் நீரூற்றி குளித்தல். |

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page